# வித்யாலட்சுமி (சி.பி.எஸ்.இ - மேல்நிலைப் பள்ளி)

சென்னாங்குப்பம்

**தேதி** : 09.12.2018 **மதிப்பெண்** : 100

**நேரம்** : 3 மணி **தமிழ் இலக்கணம்** **வகுப்பு** : பத்து

## ஒரு மதிப்பெண் வினாக்கள்: (அனைத்து வினாக்களுக்கும் விடையளி)

**கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. பல் + தீது என்பது ................................... எனப் புணரும்.
2. மேற்கு + நாடு என்பது ................................... எனச் சேரும்.
3. நிரை கவர்தல் என்பது ................................... திணை.
4. ‘நல்லவை’ இச் சொல்லை அலகிட்டால் ................................... எனப் பிரியும்.
5. பொதுமொழிக்கு சான்று தருக ...................................
6. இளவழகன் வந்தான். இது ................................... தொடர்.
7. ‘மாடு’ என்னும் சொல் ...................................
8. மாடு கன்றை ஈன்றது இத்தொடரில் மாடு என்பது ................................... குறிக்கும்.
9. வடக்கு என்னும் திசைபெயரோடு பிற திசைகள் வந்து சேரும் போது ............................... நீங்கும்.
10. மேற்கு + நாடு என்பது ................................... எனச் சேரும்.
11. கருமை + குழி என்பது ................................... எனும் விதிகளின்படி புணர்ந்தது.
12. பொருளிலக்கணம் ................................... வகைப்படும்.
13. அகத்திணைகள் ................................... வகைப்படும்.
14. மார்கழி, தை ஆகிய இரண்டும் ................................... காலத்திற்குரியது.
15. மருத நிலத்திற்குரிய தெய்வம் ...................................
16. பாலை நிலத்திற்குரிய பறவைகள் ...................................
17. புறத்திணைகள் ................................... வகைப்படும்.
18. நிரைகவர்தல் என்பது ...................................
19. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது ...................................
20. பாடாண்திணை என்பது ................................... கூறுவது.
21. ஒருதலைக் காமம் என்பது ...................................
22. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது ............................. ஆகும்.
23. உலகு என்னும் சொல் வெண்பாவில் ஈற்றடியின் ஈற்றுச்சீராயின் அதன் வாய்பாடு ........... ஆகும்.
24. நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயலடி ................................... வரும்.
25. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் ................................... முடிவது சிறப்பு.
26. வளையல் - இச்சொல்லின் ஐகாரம் ................................... குறைந்து ஒலிக்கிறது.
27. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல்லுக்கு ................................... என்பது எடுத்துக்காட்டாகும்.
28. பல் + தீது என்பது ................................... என சேரும்.
29. குறுக்கங்கள் ஐகாரக் குறுக்கும், ஔகாரக் குறுக்கம் ......................., ........................ என்பன.
30. சிலேடை என்பதன் தமிழ்ச்சொல் ...................................
31. பின்வருநிலை ................................... வகைப்படும்.
32. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
    வெரூஉம் புலிதாக் குறின்.
    என்ற குறள் ................................... அணிக்கு எடுத்துக்காட்டாகும்.
33. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ...................................
34. தொழிலைக் குறிக்கும் சொல் ...................................
35. வினைமுற்று ......................, ........................ என இருவகைப்படும்.
36. ஓர் எச்சவினை ................................... கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும்.
37. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே ................................... என்பர்.
38. ஒரு பொருட்பன்மொழிக்கு சான்று ...................................
39. இது செய்வாயா? என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக் கூறுவது ................................... விடை ஆகும்.
40. ஆடத் தெரியுமா? என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது ................................... விடை ஆகும்.
41. நன்னூல் கிடைக்குமா? எனக் கடைக்காரரிடம் கேட்பது ................................... வினா ஆகும்.
42. அடி அகரம் ஐஆதல் என்பதற்கு எடுத்துக்காட்டு தருக: ...................................
43. ஆதிநீடல் என்பதற்குச் சான்று தருக: ...................................
44. இனமிகல் என்பதற்கு எ.கா.: ................................... ஆகும்.
45. தன்னொற்றிரட்டல் என்பதற்கு சான்று................................... ஆகும்.
46. அகம், புறம் ஆகிய இரண்டும் ................................... இலக்கணம் ஆகும்.
47. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் ................................... எனப்படும்.
48. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி ...................................
49. யாமம் என்ற சிறுபொழுதின் காலம் ................................... வரை.
50. மருதம் நெய்தல் ஆகிய இரண்டிற்கான பொழுதுகள் ...................................

51. ..................................... முல்லை நிலத்திற்குரிய தெய்வம்.
52. மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் ..................................... திணைக்குரிய பறைகள்.
53. நெய்தல் திணைக்குரிய தொழில் ......................................
54. நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று .............................. விகற்பத்தானும் ............................... விகற்பத்தானும் வரும்.
55. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்றால் பல விகற்பத்தான் வருவது .............................. ஆகும்
56. வெண்பாவின் ஓசை ..................................... ஆகும்.
57. ஆசிரியப்பாவின் வேறு பெயர் ..................................... ஆகும்.
58. ஆசிரியப்பாவின் ஓசை ..................................... ஆகும்.
59. வருக ! வருக! என்பது .....................................
60. மலர்ப் பாதம் என்பதன் உருவகம் .....................................
61. நெய்தல் திணைக்குரிய தொழில் ..........................
62. புகழ்வது போலப் பழிப்பதும் பழிப்பது போலப் புகழ்வதும் .......................... அணி.

<u>**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:**</u>

63. மகரக் குறுக்கத்தை எடுத்துக் காட்டுடன் விளக்குக.
64. பெயரெச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
65. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
66. பாம்போ? கயிறோ? - எவ்வகை வினா?
67. கருங்குயில் - புணர்ச்சி விதி தருக.
68. வெண்பாவின் வகைகள் எவையேனும் இரண்டினை மட்டும் விவரித்து எழுதுக.
69. ஐகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக -
70. ஔகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக : -
71. மகரம் எவ்வெவ்விடங்களில் குறுகும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
72. சொல் என்றால் என்ன? சொல்லின் வகைகள் யாவை?
73. பொது மொழி என்றால் என்ன? சான்றுகாட்டி விளக்குக.
74. தெரிநிலை வினைமுற்றைச் சான்றுகாட்டி விளக்குக: -
75. குறிப்புப் பெயரெச்சம் என்றால் என்ன?
76. குறிப்புவினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.
77. வெளிப்படை என்றால் என்ன? சான்று தருக.
78. குறிப்பு என்பதனை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
79. இனங்குறித்தல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.
80. அடுக்குத் தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக?
81. அடுக்குத் தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
82. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை? (அல்லது) அறுவகை வினாக்கள் யாவை?
83. வடக்கு என்னும் திசைப்பெயருடன் பிற திசைகள் சேரின் எவ்வாறு புணரும்?
84. தெற்கு என்னும் திசைப்பெயருடன் பிற பெயர்கள் சேரின் எவ்வாறு புணரும்?
85. செம்மை + மொழி எவ்வாறு புணரும்?
86. வெற்றிலை *ஶி* புணர்ச்சிவிதி கூறுக.
87. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.
88. புறத்திணைகள் நான்கனை எழுதுக.
89. பகுபத உறுப்பிலக்கண உறுப்புகள் எழுதுக.
90. வாகைத்திணை என்பது யாது?
91. ‘பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்’
- இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.
92. சொற்பொருள் பின்வருநிலை அணியைச் சான்றுடன் விளக்குக.
93. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
**சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.**

<u>**உருவகத்தை உவமையாக மாற்றுக.**</u>

94. மொழியமுது :
95. கண்கயல் :
96. தமிழ்த்தேன் :
97. விரல்பூ :
98. முகம்மதி :
99. அடிமலர் :
100. புருவவில் :

*****